(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(15).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 யூலை 12 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2024 யூலை 23, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 25 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 32 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஜனவரி 12 ஆம் திகதிய 2366/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 02/2024)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (81 ஆம் அத்தியாயமான) கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் 63 ஆம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் அக்கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் மற்றும் 10 ஆம் பிரிவுகளின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2024 ஏப்ரல் 22 ஆம் திகதிய 2381/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்,— சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசமொன்றை பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 டிசம்பர் 28 ஆம் திகதிய 2364/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.07.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

# 2024 யூலை 24, புதன்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, யூலை 24, புதன்கிழமை)**

2146/2024

கௌரவ அசங்க நவரத்ன,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிலாபம், மஹவெவ பிரதேசத்தில் வசித்த, கலைஞர் சோலியஸ் மென்திஸ்க்கு சொந்தமான காணிகள் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனத்தின் நிர்வாகத்துக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி காணிகள் பொறுப்பளிக்கப்பட்ட காலகட்டம் யாது;

(iii) மேற்படி காணிகள் பொறுப்பளிக்கப்பட்ட செயன்முறை யாது;

(iv) இதற்கான இறுதி விருப்பாவணம் / காணி உறுதிப்பத்திரம் யாது;

(v) பொறுப்பளிக்கப்பட்ட மேற்படி ஒவ்வொரு காணியினதும் பெயர், பரப்பளவு மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் தனித்தனியாக யாது;

(vi) பிற்பட்ட காலத்தில் மேற்குறிப்பிட்ட காணிகள் சம்மேளனத்தினால் பராதீனப்படுத்தப்பட்டுள்ளனவா;

(vii) ஆமெனில், அந்த அடிப்படைகள் யாது?

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொறுப்பளிக்கப்பட்ட நாள் முதல் இற்றைவரை மேற்படி (அ) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு காணியிலிருந்தும் வருடாந்தம் ஈட்டப்பட்ட வருமானம் தனித்தனியாக யாது;

(ii) பொறுப்பளிக்கப்பட்ட நாள் முதல் இற்றைவரை மேற்படி காணிகள் மற்றும் அவற்றில் அமைந்துள்ள கட்டிடங்களின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு கருதி மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) திரு. சோலியஸ் மென்திஸ்க்கு உரித்தான மஹவெவயில் நிர்மாணிக்கப்பட்ட “சிவிராஜ” சிறுவர் இல்லத்தை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2148/2024

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது அரசகரும மொழிகள் ஆணையாளர் அவர்களுக்கு தமிழ் மொழியைக் கையாளும் இயலுமை இல்லையென்பதையும்;

(ii) இதன் காரணமாக இலங்கையின் அரசகரும மொழிகளுள் ஒன்றாகிய தமிழ் மொழியைப் பயன்படுத்துகின்ற பிரசைகளின் விடயங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பது இவருக்கு கடினமானதாக இருக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், தற்போது அரசகரும மொழிகள் ஆணையாளர் பதவியை வகிக்கும் அவர்கள் தமிழ்மொழி தொடர்பாக பெற்றுக் கொண்டுள்ள திறன் யாதென்பதையும்;

(ii) இலங்கையின் இணைப்பு மொழியாகிய ஆங்கில மொழி தொடர்பில் அவர்கள் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2024 ஆகஸ்ட் 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1702/2024

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தற்போது இலங்கை பொலிஸில், பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகிய ஒவ்வொரு பதவியிலும் சேவையாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவியிலும் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கும் போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

(iv) பொலிஸ் சார்ஜன்ட் பதவியிலிருந்து பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு பதவி உயர்வு பெற எடுக்கும் காலம் எவ்வளவு என்பதையும்;

(v) இலங்கை பொலிசுக்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போது, தற்போது பின்பற்றப்படுகின்ற முறையியல் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1730/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஒவ்வொரு கைத்தொழிற் பேட்டையிலுமுள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையும் தனித்தனியாக எத்தனை;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1740/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாறை மாவட்டத்திலுள்ள அரச நெற் களஞ்சியங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவை அமைக்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு களஞ்சியத்திலும் களஞ்சியப்படுத்தக்கூடிய நெல்லின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையில் மேற்படி களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்ட நெல்லின் அளவு ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள நெற் களஞ்சியங்களில் இன்றையளவில் பயன்படுத்தப்படாத நெற் களஞ்சியங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி களஞ்சியங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) அம்பாறை மாவட்டத்திலுள்ள நெற் களஞ்சியங்களிலிருந்து உச்சளவு பயனைப் பெற்றுக்கொள்வதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1752/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்திலுள்ள அரச மருத்துவமனைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி மருத்துவமனைகளில் பணிபுரியும் வைத்தியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) அவற்றிலுள்ள நோயாளர் ஊர்திகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்?

(iv) அம்மாவட்டத்திலுள்ள கிராமிய மருத்துவமனைகளில் கட்டிட வசதிகள் போதாமை போன்ற குறைபாடுகள் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(v) மேற்படி குறைபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அநுராதபுர மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகள் அதிகளவில் உள்ளார்களென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1877/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மொரகஹகந்த கருத்திட்டத்தினால் மாத்தளை மாவட்டத்தில் மேற்படி கருத்திட்டத்தை அண்டியதாக அமைந்துள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராமங்களில் வசிக்கின்ற, இன்றளவில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கிராமம் வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1915/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தால் இன்றளவில் நடாத்திச் செல்லப்படும் கிளை விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி விற்பனை நிலையங்களில் வருடாந்தம் இலாபம் ஈட்டுகின்ற மற்றும் நட்டம் பெறுகின்ற நிறுவனங்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனை என்பதையும்;

(iii) நட்டம் பெறுகின்ற விற்பனை நிலையங்களை, இலாபமீட்டும் நிலைக்கு மாற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) நட்டம் பெறுகின்ற விற்பனை நிலையங்களை மூடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1919/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கையில் இடம்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களின் எண்ணிக்கையும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்கள் மற்றும் பெண்களுக்கெதிரான துன்புறுத்தல்களின் எண்ணிக்கையும் யாது;

(ii) மேற்படி துஷ்பிரயோகங்கள் / துன்புறுத்தல்களில் தற்போது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாது;

(iii) இவற்றில் இணக்கஞ் செய்யப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1944/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சர்வதேசச் சந்தையை இலக்காகக் கொண்டு அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) வருடமொன்றில் ஏற்றுமதி செய்யப்படும் அலங்கார மீன்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இலங்கையில் அலங்கார மீன் வளர்ப்புக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1971/2024

கௌரவ யூ.கே சுமித் உடுக்கும்புர,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள கோழிப் பண்ணைகளின் எண்ணிக்கை, அவற்றின் சராசரி வருடாந்த முட்டை உற்பத்தி, இலங்கையில் சராசரி வருடாந்த முட்டை நுகர்வு மற்றும் வருடாந்தம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற முட்டைகளின் எண்ணிக்கை என்பவை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) சந்தையில் முட்டை விலை அடிக்கடி கூடிக்குறைவதனால் முட்டை விலையை நிலையாகப் பேணிச் செல்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2138/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மெதகும்பர பிரதேச செயலகப் பிரிவின் மாபேரியதென்ன கிராம அலுவலர் பிரிவிலுள்ள தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான காணியில் வசிக்கும் 235 குடும்பங்களை, மாபேரியதென்ன உள்ளக விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அக்காணியை விட்டு வெளியேற்றுவதற்கு 2015.04.08 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபையினுடைய ஒப்புதலுடன் கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும்;

(ii) மேற்படி தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் இதுவரை காலதாமதம் ஏற்பட்டமையினால் அக்காணியில் வசிப்பவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும்;

(iii) கட்டுமான பணிகளின் காரணமாக பல வீடுகளுக்கு சேதமேற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இவ்விமான நிலையத்தை நிர்மாணிப்பதன் விளைவாக வீடுகளை இழக்கும் நபர்களுக்கு அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் மாற்றுக் காணிகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2024 ஆகஸ்ட் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1996/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான 14 ஏக்கர் விசாலமானதொரு காணி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் தொகைக்குக் குறைவாக பெறுகைச் செயன்முறையின்றி சேவை வழங்கல் மற்றும் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்கு வேறொரு கம்பனிக்கு/நிறுவனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டதன் காரணமாக 73 மில்லியன் டொலர் நட்டம் ஏற்படுகின்றது என்பதையும்;

(ii) மேலுள்ளவாறு குத்தகைக்கு வழங்கும் போது, 35 வருட உச்சளவான குத்தகைக் காலம் 50 வருடங்களாக நீடிக்கப்பட்டதன் காரணமாக இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு நட்டம் ஏற்படுகின்றது என்பதையும்;

ஏற்றுக்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2010/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் அடிக்கடி நில நடுக்கங்கள் இடம்பெறுகின்றன என்பதை அவர் அறிவாரா?

(ii) மேற்படி நில நடுக்கங்கள் ஏற்படுவதற்கு ஏதுவான காரணங்கள் ஆய்வுகள் மூலமாக உறுதிப்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நில நடுக்கங்கள் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அக்குடும்பங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2021/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், ஏறாவூர் மற்றும் மருதமுனை ஆகிய இடங்களில் 2014.02.05 ஆம் திகதி முதல் Privelth Global (Pvt.) Ltd. எனும் பெயரில் நிதி நிறுவனமொன்று நடாத்திச் செல்லப்பட்டது என்பதையும்;

(ii) அந்நிறுவனத்தின் பணிப்பாளராகப் பணியாற்றிய அஹமட் ஷெரீம் முஹம்மது சிஹாப் (சிஹாப் ஷெரீம்) மற்றும் பாத்திமா பர்ஸானா மார்கார் ஆகியோர் சுமார் 1400 பேரின் 170 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணத்தொகையை மோசடி செய்துள்ளார்கள் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பணிப்பாளரும் அவரது குடும்பத்தினரும் இன்றளவில் இந்தியாவில் தலைமறைவாகியுள்ளனர் என்பதையும்;

(iv) இது தொடர்பில் கல்முனை மற்றும் சம்மாந்துறை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட நபர்களை கைதுசெய்து இலங்கைக்குக் கொண்டு வர எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2048/2024

கௌரவ லலித் எல்லாவல,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு, "தாமரைக் கோபுரத்தை" நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அதன் கட்டுமானங்களுக்கு வெளிநாட்டு அன்பளிப்புகள் கிடைத்தனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட அரச நிதி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிதி பெறப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vi) கோபுரம் திறக்கப்பட்ட நாள் முதல் இது வரை அதன் வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தாமரைக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு கேள்வி மனு கோரப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல், ஏற்புடைய கட்டுமான நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) கட்டுமானப் பணிகள் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டிருப்பின், அந் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதி யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2057/2024

கௌரவ வேலு குமார்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், பாத்தஹேவா ஹெட பிரதேச செயலகப் பிரிவின், அம்பலமான கிராம உத்தியோகத்தர் பிரிவில் அகழ்வுக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) அந் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திர வகை யாதென்பதையும்;

(iii) மேற்படி நிறுவனத்தினால் அகழப்படும் கனிமம் யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட நிறுவனத்தினால் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் காணியின் அளவு யாதென்பதையும்;

(v) மேற்படி காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அகழ்வு நடவடிக்கைகள் உரிய தர நியமங்களுக்கேற்ப மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அது தொடர்பாக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2024 ஆகஸ்ட் 08, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் இன்றளவில் இயங்கிக் கொண்டிருக்கும் அனுமதிப்பத்திரமுடைய கருங்கல் உடைக்கும் வேலைத் தளங்களின் எண்ணிக்கையானது ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) இவ்வேலைத் தளங்கள் காரணமாக குண்டசாலை பிரதேச செயலகப் பிரிவின் மல்பான, ஹீப்பிடிய, அஹஸ்பொக்குண போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறியக்கிடைத்துள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் கருங்கல் உடைக்கும் வேலைத் தளங்களை அண்டிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள சுற்றுச் சூழல் பிரச்சினைகள் மற்றும் அதன் காரணமாக அப்பிரதேசங்களில் வசிப்பவர்களின் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் உயிர் ஆபத்துக்கள் தொடர்பாக அறிந்துள்ளாரா என்பதையும்;

(ii) சில வேலைத் தளங்களில் உரிய தரம் பேணப்படாமல் கருங்கற்கள் உடைக்கப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட கைத்தொழிலை முன்னெடுத்துச் செல்வதற்கும், அத்துறை சார்ந்த தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும், அவ்வேலைத் தளங்களை அண்டிய பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

44/2024

கௌரவ புத்திக பத்திறண,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015.01.01 ஆம் திகதி தொடக்கம் 2023.12.31 ஆம் திகதி வரையில் இலங்கையில் விற்பனை செய்யப்பட்டுள்ள சிகரெட்டுக்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலமாக அரசாங்கம் ஈட்டிக்கொண்டுள்ள வருமானம் ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) சிகரெட்டுக்களின் விலையை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) சிகரெட் விற்பனையை அதைரியப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

313/2024

கௌரவ ஹேஷா விதானகே,— துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் திறந்துவைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அன்று முதல் இன்று வரை அவ்விமான நிலையத்தின் வருடாந்த வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு ஆண்டு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விமான நிலையத்தின் வருமானம் குறைவடைதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

362/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1990 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில் நியமிக்கப்பட்டுள்ள சனாதிபதி விசாரணை ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையானது இலங்கையில் பதவிவகித்த ஒவ்வொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கும் ஏற்ப தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையானது, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், கல்வி, தேர்தல்கள் மறுசீரமைப்பு மற்றும் ஊழல்களை வெளிகொணர்தல் ஆகிய ஒவ்வொரு விடயத் துறையின் படியும் ஒவ்வொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதிக்கு அமைவாகவும் தனித்தனியே எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டவாறு ஆணைக்குழு அறிக்கைகளின் படி வெளிக்கொணரப்பட்ட குற்றவாளிகள் மற்றும் அவர்களுக்கு வழங்குவதற்காக விதப்புரை செய்யப்பட்டுள்ள தண்டனைகள் ஒவ்வொரு ஆணைக்குழுவிற்கும் ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவுக்குமாக செலவிப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுக்களின் இறுதி அறிக்கைகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக பெறக்கூடியதாக உள்ளனவா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) இதுவரை இறுதி அறிக்கையொன்றை வெளியிடாத ஆணைக்குழுக்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்ட காலப்பகுதி மற்றும் அவற்றின் உறுப்பினர்கள் தனித்தனியே யாவர் என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

371/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை அரசாங்கம், லஸாட் - பிரான்ஸ் கம்பனியிடம் (M/S Lazards-France) நிதி ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம் கிளிபர்ட் சான்ஸ் (M/S Clifford Chance LLP) கம்பனியிடம் சட்ட ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2079/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை அரசாங்கத்துக்குச் சொந்தமான வானொலி அலைவரிசைகள் மற்றும் தொலைகாட்சி அலைவரிசைகள் ஊடாக நேரடி வர்ணனைச் சேவை வழங்கப்பட்ட மத வைபவங்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வைபவங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட வைபவங்களை ஒளி/ஒலிபரப்பு செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி வைபவங்களை ஒளி/ஒலிபரப்பு செய்தமைக்காக இதுவரை அறவிடப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி அறவிடப்பட வேண்டியுள்ள தொகையை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2087/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற T-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஐந்து பேர் அடங்கிய குழுவின் உறுப்பினர்கள் யாவர் என்பதையும்;

(ii) இக்குழுவின் அறிக்கைக்கு அமைவாக மேற்படி சுற்றுப்போட்டியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட கிரிக்கெட் வீரர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவகத்தின் உத்தியோகத்தர்களின் பெயர்கள், பதவிப் பெயர்கள், முகவரிகள் மற்றும் மேற்படி ஒவ்வொரு வீரருக்கும்/உத்தியோகத்தருக்கும் எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தனிதனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) அவ்விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2111/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட 14 அரசாங்க முதனிலை வணிகர்களால் 2022.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களை வெவ்வேறாகவும்;

(ii) இலங்கை அரசாங்கத்தினால் விநியோகிக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள் தொடர்பில் இதே முதனிலை வணிகர்களால் 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களை வெவ்வேறாகவும்;

(iii) 2022.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்த வணிகர்களால் ஈட்டப்பட்ட மொத்த மூலதன இலாபங்களையும்;

(iv) 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்த வணிகர்களால் ஈட்டப்பட்ட மொத்த மூலதன இலாபங்களையும்;

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறியத் தருவாரா?

(ஆ) (i) 2023.06.30 இல் முடிவடைந்த காலப்பகுதியில் இந்த வணிகர்களால் ஈட்டப்பட்ட மூலதன இலாபங்களில் கணிசமான அதிகரிப்பு இருந்ததா என்பதையும் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா;

(ii) அவ்வாறெனின், அதற்கான காரணங்களையும்;

(iii) இவ்வாறு எதிர்பாராது ஈட்டப்பட்ட பெரும் இலாபத்திற்காக இந்த வணிகர்களால் செலுத்தப்பட்ட வரித் தொகையினை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2149/2024

கௌரவ றிஸாட் பதியுதீன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, கிழக்கு மாகாணம் நீங்கலாக, 2018.8.31 திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன என்பதையும் இது தொடர்பான ஒரு பகிரங்கப் போட்டிப் பரீட்சை 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைப் பெறுபேறுகள் 05 வருட நீண்ட இடைவெளியின் பின்னர் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) எவ்வாறாயினும், நேர்முகப்பரீட்சையின் இறுதிப் பெறுபேறுகள் இது வரை வெளியிடப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை என்ன அடிப்படையில் நிரப்பப்பட்டன என்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் தற்போதைய நிலை என்னவென்பதையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்டுள்ள இறுதி நேர்முகப்பரீட்சையினை நடத்துவதன் தற்போதைய முன்னேற்றம் என்னவென்பதையும்;

(v) மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாவிட்டால், வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ள திகதியினையும்;

(vi) என்ன அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2150/2024

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நகர வீட்டு உரித்துரிமையை" வழங்கும் போது பின்பற்றும் நடைமுறைகள் யாவையென்பதையும்;

(ii) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் சொந்தமான அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்களிலிருந்து உரித்துறுதிகளை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையானது, ஒவ்வொரு வீடமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) அடுக்கு மாடி குடியிருப்பாளர்களுள், இன்றளவில் உரித்துறுதிகள் வழங்கப்பட்டுள்ள குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையானது, ஒவ்வொரு வீடமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) இதுவரை உரித்துறுதிகள் வழங்கப்படாத அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கான உரித்துறுதிகளை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(v) அடுக்கு மாடி குடியிருப்பாளர்களுக்கு உரித்துறுதிகளை வழங்கியதன் பின்னர், 2024ஆம் ஆண்டு தொடக்கம் வரி அல்லது வாடகைக் கட்டணத்தை செலுத்துவதிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதையும்;

(vi) அடுக்கு மாடி குடியிருப்பாளர்களுக்கு உரித்துறுதிகளை வழங்கும் போது நொத்தாரிசுக் கட்டணம், முத்திரைக் கட்டணம் மற்றும் வரி உள்ளடங்கலான கட்டணங்களிலிருந்து அவர்கள் விடுவிக்கப்படுவார்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2024 ஆகஸ்ட் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

383/2024

கௌரவ தயாசிறி ஜயசேகர,— முதலீட்டு மேம்பாடு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி உற்பத்தி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அத்தொழிற்சாலை இயங்கிய காலத்தில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்பட்ட சீனி மற்றும் மதுசாரத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலை மூடப்பட்ட திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மூடப்பட்டதை தொடர்ந்து அத்தொழிற்சாலையை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக முன்வந்த நிறுவனம்/நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அவற்றில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலையின் தற்போதைய நிலைமை யாதென்பதையும்;

(v) மேற்படி தொழிற்சாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

470/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களணி கங்கை பல இடங்களில் கடுமையான சூழல் மாசடைவுக்கு உட்படுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) அவ்விடங்கள் இனம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனின், அவ்விடங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iv) களணி கங்கை மாசடைவதை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

514/2024

கௌரவ ரோஹண பண்டார,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில், பலாகல பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கல்கிரியாகம பொலிஸ் பிரிவில் 'ஹுருல்லேவ' எனும் பெயரில் தொல்பொருள் தளமொன்று உள்ளதென்பதையும்;

(ii) கடந்த காலங்களில் மேற்படி தொல்பொருள் தளம் சிலரால் டோசர் செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி அழிப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

545/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தேசிய அபிவிருத்தி லொத்தர் சபையின் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட சபை பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிட்ட தொகை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) பிரச்சார நடவடிக்கைகளுக்கு நிறுவனமொன்றைத் தெரிவுசெய்கையில் மேற்படி சபையினால் பின்பற்றப்பட்ட செயன்முறை யாதென்பதையும்;

(iv) பிரச்சார நடவடிக்கைகளுக்காக செலவிடப்படுகின்ற தொகை அபிவிருத்தி லொத்தர் சபையின் மொத்த வருமானத்தின் எத்தனை சதவீதம் என்பதையும்;

(v) பிரச்சார நடவடிக்கைகளைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி சபையின் லொத்தர் சீட்டு விற்பனையில் ஏற்பட்ட வளர்ச்சி வருட வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

567/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பயன்படுத்தப்படும் காணி உறுதி வகைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி உறுதி வகைகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அரச காணிகளை ஒழுங்குமுறைப்படுத்தலின் கீழ் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வழங்கப்பட்டுள்ள காணி உறுதிகளின் எண்ணிக்கையும் எதிர்காலத்தில் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள காணி உறுதிகளின் எண்ணிக்கையும் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள காணி உறுதிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

598/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை, வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வோராண்டின் இறுதியிலும் வெளிநாடு சென்றிருந்த இலங்கையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் மீண்டும் நாடு திரும்பிய ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வெறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை, வெளிநாடு சென்றுள்ள இலங்கை ஊழியர்களால் நாட்டுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் அளவு ஒவ்வோராண்டு வாரியாக ஐக்கிய அமெரிக்க டொலர் பெறுமதியில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலத்தில் இவர்களால் அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியில் ஏற்பட்டிருந்த வீழ்ச்சி ஒவ்வோராண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) இவர்களால் அனுப்பப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி அளவு வீழ்ச்சியடைவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

619/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023 பெப்ருவரி மாதம் 14 ஆம் திகதி பிற்பகல் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு ஐக்கிய அமெரிக்காவின் விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு விமானங்கள் வருகை தந்துள்ளன என்பதை அறிவாரா;

(ii) மேற்படி விமானங்களில் வருகைதந்துள்ள நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு நபரினதும் பெயர், வெளிநாட்டுக் கடவுச்சீட்டு இலக்கம், வீசா அனுமதிப்பத்திர இலக்கம், பிரதிநிதித்துவம் செய்த நிறுவனம் மற்றும் பதவி வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) அவர்கள் இலங்கையில் கலந்துரையாடல்களை நடாத்தியுள்ள ஒவ்வொரு நபரினதும் பெயர், அவர் பிரதிநிதித்துவம் செய்த நிறுவனம் மற்றும் பதவி வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) அவ்வாறு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்;

(vi) இதன்போது எட்டப்பட்ட உடன்பாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

635/2024

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2023 ஆம் ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள மனிதப் படுகொலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) அது தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது;

(iii) அதில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டுள்ள போதைப்பொருளின் அளவு யாது;

(ii) மேற்படி போதைப் பொருள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) இலங்கைப் பொலிஸாரினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 'யுக்திய' வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1095/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள காரீய சுரங்கங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) அவற்றில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற காரீயத்தின் அளவு யாது என்பதையும்;

(iv) மேற்படி காரீயம் ஏற்றுமதி செய்யப்படுகின்ற நாடுகள் யாவை என்பதையும்;

(v) உள்நாட்டு உற்பத்திகளுக்கு காரீயம் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி உற்பத்திகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1227/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி டிப்போ ஒவ்வொன்றிலும் இன்றளவில் கடமைபுரிகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கும் அமைவாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி டிப்போ ஒவ்வொன்றிலும் இன்றளவில் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய நிலையிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கை, பழுது பார்த்த பின்னர் சேவையில் ஈடுபடுத்தக்கூடிய பேருந்துகளின் எண்ணிக்கை மற்றும் பழுது பார்க்க முடியாத நிலையில் காணப்படுகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 2/2024

கௌரவ புத்திக பத்திறண,— பல்கலைக்கழக மற்றும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் மாணவர்களால் எழுதப்படுகின்ற ஆய்வுக் கட்டுரைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் அபிவிருத்திப் பணிகளை இலக்குவைத்துத் தயாரித்தல்,— இலங்கையில் தற்போதுள்ள பல்கலைக்கழகங்களிலும் ஏனைய மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களிலும் கல்வி பயிலும் மாணவர்கள்தம் கற்கைநெறிகளுடன் சம்பந்தப்பட்டதாக எழுதுகின்ற ஆராய்ச்சிக் கட்டுரைகளை, இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார விருத்திக்கு ஏற்புடையதாக எழுதவேண்டியமை முக்கியம்பெறுவதாலும், இக்கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் விரிவுரையாளர்கள் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கிடையில் சிறந்த இணைப்பாக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் அமைச்சு மட்டத்திலும் பொறுப்புவாய்ந்த அலுவலர் ஒருவரை நியமிக்கவேண்டி உள்ளதாலும், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளைச் செயற்படுத்தும் போது நீண்டகால, நடுத்தரக்கால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைந்துகொள்வதன் பொருட்டு அத்தகைய ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயன்படுத்த முறையான ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2024

கௌரவ புத்திக பத்திறண,— உலகெங்குமுள்ள பௌத்த வணக்கஸ்தலங்களைப் பாதுகாக்க முன்னணி வகித்தல்,— உலகெங்குமுள்ள பௌத்தர்களின் வழிபாட்டுக்குரிய பௌத்த வணக்கஸ்தலங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும், அனைத்துலக மட்டத்தில் பௌத்தர்கள் சார்பாக குரல் எழுப்பக்கூடிய வலுவான ஓர் அமைப்பை உருவாக்குவதற்குமென உலகெங்குமுள்ள பௌத்த மதத் தலைவர்களையும் அமைப்புகளையும் ஒருங்கிணைக்க, இலங்கை தலைமையேற்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2024

கௌரவ புத்திக பத்திறண,— முதியோர் பராமரிப்புச் சபைகளை நாடுபூராக விஸ்தரித்தல்,— வாழ்க்கையின் அந்திம காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் முதியோர்கள் தம் குடும்ப அங்கத்தவர்களாலும் சில நிறுவனங்களாலும் புறக்கணிக்கப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு அநீதிகள் குறித்து முறைப்பாடு செய்ய, சுகாதார அமைச்சில், முதியோர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகத்தின் கீழ் இயங்கிவரும் முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 5/2024

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ புத்திக பத்திறண,— இணையத்தின் ஊடாக விற்பனை செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஔடத தீத்தொழிலை ஒழித்தல்,— தற்போது இணையத்தின் ஊடாக தரமில்லாத ஔடதங்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் அழகு சாதனப் பொருட்களின் உற்பத்திகள் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாலும், இந்த நிலைமை எமது நாட்டு மக்களின் உயிர் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என்பதாலும், இந்த நிலைமையை ஒழிப்பதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரித்து செயற்படுத்த வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/2024

கௌரவ புத்திக பத்திறண,— கடனுதவித் திட்டமொன்றின் மூலம் முதியோர் சமுதாயத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— 60 வயதைக் கடந்துள்ள முதியோர் சமுதாயத்தின் வாழ்வாதார வழிகளை வலுவூட்டுவதன் மூலம் ஒட்டுமொத்த இலங்கைப் பொருளாதாரத்தின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவர்களை பங்குகொள்ளச்செய்ய முடியுமென்பதாலும், குறித்த முதியோர் சமுதாயத்துக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடன் வசதிகள் வழங்கப்படாமையால் அவர்கள் சமூகத்தில் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாலும், 60 வயதைக் கடந்தவர்களுக்கு வங்கிக் கட்டமைப்பினூடாக கடனுதவி வழங்கும் முறையியலொன்றை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.9/2024

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை வெளியிடுதல்,— மனித பரிணாம வளர்ச்சியிலிருந்து தொல்பொருளியல், இலக்கியம், நாட்டுப்புறவியல், உரோம, கிரேக்க மற்றும் பாரசீக வரலாறுகளை ஆய்வு செய்து இலங்கையின் வரலாறு பற்றிய நூலொன்றை நிபுணத்துவம் பெற்ற ஆசிரியர் குழாத்தின் கீழ் அரச அனுசரணையுடன் வெளியிடுவதற்கு உகந்த நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 11/2024

கௌரவ ஹேஷா விதானகே,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2024

கௌரவ ஹேஷா விதானகே,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2024

கௌரவ ஹேஷா விதானகே,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டம் ஒன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2024

கௌரவ ஹேஷா விதானகே,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2024

கௌரவ ஹேஷா விதானகே,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2024

கௌரவ ஹேஷா விதானகே,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 17/2024

கௌரவ ஹேஷா விதானகே,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் அரசியலமைப்பை ‘பிரெயில்’ எழுத்து முறையிலும் “கேட்பொலி” (audio) வடிவத்திலும் தயார்செய்தல்,— அரசியலமைப்பானது எந்தவொரு நாட்டினதும் அடிப்படைச் சட்டமாகவும் அரசின் அடிப்படை மாதிரியாகவும் அமைந்திருப்பதாலும், சுமார் இருபத்திரண்டு மில்லியன்களான இலங்கைப் பிரசைகளில் சுமார் இரண்டு மில்லியன் பேர் மாற்றுத்திறனாளிகளாக உள்ளதாலும், மாற்றுத்திறனாளி களுக்கு மத்தியிலும் சுமார் ஆறு இலட்சம் பேர் செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற பிரசைகளாக உள்ளதாலும், நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய அறிவு மற்றும் புரிதலைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்படி செவிப்புலனற்ற மற்றும் கற்புலனற்ற மக்களுக்காக இலங்கையின் அரசியலமைப்பை ‘பிரெயில்’ எழுத்துமுறையிலும் ‘கேட்பொலி’ (audio) வடிவத்திலும் தயார் செய்வதற்கத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய தகுதியின் அடிப்படையிலும் பாடசாலை அடிப்படையிலும் தலா 50% அமையும் வகையில் பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் சுட்டியாகிய Z புள்ளியை (Z-score) கணிப்பிடுதல்,— க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களில் கலைப் பீடம் தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழக பீடங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் அடிப்படை மற்றும் சுட்டி Z புள்ளியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாலும், இந்த முறையியலுக்கு அமைவாக Z புள்ளியில் 40% தேசிய தகுதியின் (national merits) அடிப்படையிலும் 55% மாவட்ட அடிப்படையிலும் (district basis) 5% மிகவும் பின்தங்கிய மாவட்டங்களின் (remote districts) அடிப்படையிலும் அமையும் வகையில் கணிப்பீடு செய்யப்படுவதாலும், ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒரே சமனான புள்ளி மட்டத்தை அல்லது பெறுமானத்தை பிரதியீடு செய்தல் நீதியானதாகவும் நியாயமானதாகவும் அமையாததாலும், மாவட்ட மற்றும் மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் எனும் அடிப்படைக்குப் பதிலாக பாடசாலை அடிப்படையை பிரதியீடு செய்வதன் மூலம் பாடசாலை முறைமையில் உள்ள உயர்தர பிரிவுகளைக் கொண்ட மூவாயிரத்து நாற்பத்திரண்டு (3042) பாடசாலைகளை சில தொகுதிகளின் கீழ் வகைப்படுத்தி பல்கலைக்கழக அனுமதிக்கான தேசிய தகுதியின் கீழ் 50% மற்றும் பாடசாலை அடிப்படையின் கீழ் 50% என்றவாறு பல்கலைக்கழக அனுமதிக்கு Z புள்ளியை கணிப்பிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுதல்,— இலங்கையின் சிங்கள சமூகத்தில் தனிநபர் பெயர்களை சூட்டுகின்ற சந்தர்ப்பங்களில் குடும்பப் பெயரானது பெரும்பாலும் நிலப்பிரபுத்துவ சமூகத்தில் காணப்பட்ட கடமைகளையும் மன்னர்களுக்கான பணியையும் பின்புலமாகக்கொண்டு அமைகின்ற காரணத்தினாலும், சில குடும்பப் பெயர்கள் மேற்படி கடமைகளுக்குரிய சாதியினை மேலெழுப்பும் வகையில் அமைந்துள்ளதாலும், நீதிமன்ற நடவடிக்கைகளின் போது அல்லது தேர்தல்களில் வாக்களிப்பதற்காக வாக்காளர்களின் பெயர்கள் அழைக்கப்படுகின்ற போது அல்லது பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களில் பட்டதாரிகள் அழைக்கப்படுகின்ற போது அல்லது தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கின்ற போது முதற்பெயருடன் குடும்பப் பெயரையும் சத்தமிட்டு அழைப்பதனால் பெரும்பாலானவர்கள் பாரிய அசௌகரியத்திற்கு ஆளாகின்ற காரணத்தினாலும், தற்போதைய சந்ததியினரால் நிராகரிக்கப்படுகின்ற நவீன உலகத்திற்குப் பொருந்தாத இச்சட்டத்தினை, வழக்கத்தினை அல்லது மரபினை நீக்கி மக்கள் முன்னிலையில் தனிநபர் பெயர்களை பகிரங்கமாக சத்தமிட்டு அழைக்கும் சந்தர்ப்பங்களில் முதற்பெயருடன் குடும்பப் பெயரின் முதலெழுத்துக்களை அல்லது அடையாள அட்டையின் இலக்கத்தினை மாத்திரம் குறிப்பிடுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு 2023 ஆம் ஆண்டளவில் பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு கல்வி அமைச்சர் என்ற வகையில் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று என்னால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்கையில் ஆகக்குறைந்தது 5% பிரதிநிதித்துவத்தை அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு வழங்குதல்,— இலங்கையில் இறுதியாக நடாத்தப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி நாட்டில் அங்கவீனர்களின் எண்ணிக்கையானது மொத்த சனத்தொகையில் 8%ஐ விஞ்சியுள்ளதாலும், கிராமிய நிருவாகம் இடம்பெறுகின்ற உள்ளூராட்சி நிறுவனங்கள் முதல் தேசிய கொள்கைகள் உருவாக்கப்படும் பாராளுமன்றம் வரையிலான மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கு அங்கவீனர்கள் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பு மிகவும் அரிதாகவே காணப்படுவதாலும், அங்கவீனமுற்ற இந்நாட்டு பிரஜைகளுக்கான கொள்கை உருவாக்கம் இடம்பெற்றிருப்பதும் இடம்பெறுவதும் வளர்ச்சியடைந்த நாடுகளின் கோட்பாடுகளுக்கு ஏற்பவல்ல என்பதாலும், அனைத்து மக்கள் பிரதிநிதி நிறுவனங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்களைத் தயார் செய்கையில், ஆகக்குறைந்தது 5%மான பிரதிநிதித்துவம் அங்கவீனமுற்ற பிரஜைகளுக்கு கிடைக்கும் வகையில் அரசாங்கம் உரிய சட்டங்களைத் திருத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— நில்வளா கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தை துரிதமாக செயற்படுத்தல்,— 1980 ஆம் தசாப்தத்தில் ஆரம்பிக்கப்பட்ட நில்வளா கங்கை அபிவிருத்தித் திட்டத்தை பூரணப்படுத்த முடியவில்லை என்பதால் மாத்தறை மாவட்டத்திலும் நில்வள பள்ளத்தாக்கிலும் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கையும் பொருளாதாரமும் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பதாலும், ஊறுபொக்கு ஓயா மற்றும் கிரம-ஆர என்பவற்றை அம்பாந்தோட்டை வறண்ட வலயத்திற்குத் திசைதிருப்புதல் மற்றும் கீழ் பள்ளத்தாக்கில் பட்டுவிட்ட நீர்த்தேக்கம், அத்துரலிய நீர்த்தேக்கம், கடவெத்துவ நீர்த்தேக்கம் மற்றும் தெதியகல நீர்த்தேக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களை அமைத்தல் மற்றும் பாதுகாப்பான வலயம் மற்றும் பாதுகாப்பற்ற வலயங்கள் தொடர்பில் மீளவும் கற்றாராய்ந்து கைவிடப்பட்ட அணைகளை (bunds) மீண்டும் நிர்மாணித்தல் என்பவற்றை முதலாகக் கொண்ட மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை பிரதேசங்கள் மீது நேரடியாக தாக்கம் செலுத்தக்கூடிய நில்வள கங்கை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் அடிப்படைத் திட்டங்களை துரிதமாக அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.30/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.31/2024

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.32/2024

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/2024

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.34/2024

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.35/2024

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.36/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2024

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.39/2024

கௌரவ ரோஹண பண்டார,— டிஜிட்டல் கல்வி முறைமைக்குத் தேவையான அடிப்படை அடித்தளத்தை உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— உலகம் தற்போது மிகவும் வேகமாக மாறிவரும் பின்னணியில் அதற்கமைவாக கல்வி முறையும் மாற்றமடைய வேண்டுமென்பதால் இலங்கையிலும் டிஜிட்டல் கல்வி முறைமைக்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.41/2024

கௌரவ ரோஹண பண்டார,— கூட்டுறவு கிராமிய வங்கிகளில் வைப்பாளர்களின் வைப்புக்களைப் பாதுகாத்தல்,— கூட்டுறவு இயக்கத்துடன் தொடர்புடைய கிராமிய கூட்டுறவு வங்கிகள் மீது கிராமிய மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை உயர் மட்டத்தில் கணப்படுகின்ற போதிலும் பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தெஹிவளை-கல்கிசை கூட்டுறவு கிராமிய வங்கி, மஹரகம கூட்டுறவு கிராமிய வங்கி போன்ற கிராமிய வங்கிகள் தற்போது வீழ்ச்சியடைந்துள்ளதால் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ள அதன் வைப்பாளர்களுக்கு நியாயத்தை நிலைநாட்டுவதற்குப் பொருத்தமான வேலைதிட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.42/2024

கௌரவ ரோஹண பண்டார,— ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை விளைதிறன்மிக்க வகையில் முதலீடு செய்தல்,— தனியார் துறை ஊழியர்களின் நலன்புரிக்காக தாபிக்கப்பட்டுள்ள ஊழியர் சேமலாப நிதியத்தின் வசமுள்ள பணத்தை பங்குச் சந்தையில் பட்டியலிடப்படாத நிறுவனங்களில் முதலீடு செய்வதனூடாக எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப் பெறவில்லையென தேசியக் கணக்காய்வு அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதால், தனியார் துறையின் ஊழியர்களுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும் வகையில் மேற்படி பணத்தை பயன்தரும் துறைகளில் முதலீடு செய்வதற்கு அரசாங்கம் பொருத்தமான வேலைத்திட்டமொன்றை தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.43/2024

கௌரவ ரோஹண பண்டார,— புகையிரத திணைக்களத்தில் சமகால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிறுவனக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்,— துரிதமாக தொழில்நுட்பம் மாற்றமடைந்து வரும் உலகில், காலணித்துவக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட திணைக்களச் சட்டகத்தின் கீழ் புகையிரத திணைக்களத்தை மேற்கொண்டும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதால், மேற்படி திணைக்களத்தில் சமகால மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நிறுவனக் கட்டமைப்பொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.44/2024

கௌரவ ரோஹண பண்டார,— நிதியியல் எழுத்தறிவை மேம்படுத்துதல்,— எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான ஆற்றல் அதாவது எழுத்தறிவு இலங்கையில் உயர் மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும், நிதியியல் எழுத்தறிவு இன்னும் கீழ் மட்டத்திலேயே காணப்படுவதனால், பாடசாலைப் பருவத்திலிருந்தே நிதியியல் எழுத்தறிவினை மக்கள் மயப்படுத்துவதற்குப் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2023

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,— அரசியல் கட்சிப் பதவி தாங்குநர்களில் பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்,— அரசியலில் பெண்களின் பங்கேற்பினையும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தையும் அதிகரிக்கும் முழுமை அணுகுமுறையாக பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு அரசியல் கட்சியும் தமது நிறைவேற்றுக் குழுவில் தீர்மானம் மேற்கொள்ளும் மட்டத்தில்/இயல்திறனில் குறைந்தபட்சம் 30% மான பெண்களை நியமிக்கத் தேவையான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.